# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2017 சனவரி

## (AA22) கிரயக் கணக்கீடும் அறிக்கையிடலும்

---

இவ்வினாப்பத்திரம் மொத்தமாக 10 வினாக்களை உள்ளடக்கிய 4 பகுதிகளைக் கொண்டுள்ளது. இவ்வினாப் பத்திரம் கிரயக் கணக்கீட்டுடன் தொடர்புடைய அடிப்படை எண்ணக்கருக்கள் பற்றிய அறிவைச் பரீட்சித்துள்ளது. பரீட்சார்த்திகள் சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு கோரப்பட்டிருந்தனர். விடையளிக் கும்போது உபயோகப்படுத்தப்பட வேண்டிய வினைச்சொற்களைக் கொண்ட நிரலும் வினாப்பத்திரத்துடன் வழங்கப்பட்டிருந்தது.

10 வினாக்களும் பின்வருமாறு அமைக்கப்பட்டிருந்தன :

**<u>பகுதி A – 20 புள்ளிகள்</u>**

ஒவ்வொன்றும் 01 அல்லது 02 புள்ளிகளைக் கொண்ட பல்வேறு நோக்கச் சோதனை வினாக்கள். இவ்வெல்லா வினாக்களுக்கும் விடையளிக்குமாறு கோரப்பட்டது.

**<u>பகுதி B – 25 புள்ளிகள்</u>**

ஒவ்வொன்றும் 5 புள்ளிகளைக் கொண்ட ஐந்து கட்டாய வினாக்கள்.

**<u>பகுதி C – 30 புள்ளிகள்</u>**

ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மூன்று கட்டாய வினாக்கள்.

**<u>பகுதி D – 25 புள்ளிகள்</u>**

இரண்டு பகுதிகளை உள்ளடக்கிய ஒரு கட்டாய வினா. இதில் 15 புள்ளிகளை பகுதி (A) கொண்டிருந்தது.

10 புள்ளிகளை பகுதி (B) கொண்டிருந்தது.

வினாப்பத்திரத்தின் தரமும் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையும் திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகளுக்கு நேரத்தைச் சரியாக ஒதுக்கீடு செய்து விடையளிப்பதற்கு முடிந்திருந்தமையை அவர்களது விடைகளிலிருந்து அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளுக்கு ஏற்ப பரீட்சார்த்திகளுக்கு நேரம் பற்றிய வழிகாட்டல் வழங்கப்படுவதால் அவர்களால் ஒவ்வொரு வினாவுக்குமான நேரத்தை உரியவாறு செலவழிக்க முடிந்திருந்தது.

## பகுதி A

**வினா இல. 01** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20)

இவ்வினாக்கள் பிரதானமாக அடிப்படை கிரயக் கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் அடிப்படையான கணிப்பீடுகள் போன்றவற்றின்மீது கவனத்தைச் செலுத்தியிருந்தன. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் 20 புள்ளிகளில் அதிகமானவற்றைப் பெற்றிருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள், ஊதியத்திற்கான கால வீத முறைமையின் அனுகூலம் தொடர்பில் கேட்கப்பட்ட வினா இல. 1.3 இற்கான புள்ளியைப் பெறுவதற்குத் தவறியிருந்த அதே நேரம் ஒருங்கிணைந்த கணக்கீட்டு முறைமை தொடர்பில் பிழையான கூற்றைத் தெரிவுசெய்யுமாறு கோரப்பட்ட வினா இல. 1.5 இற்கான புள்ளியையும் பெறத் தவறியிருந்தனர். வினா இல. 01 இற்கான உப வினாக்களுக்கு விடையளிக்கும்போது சில பரீட்சார்த்திகளிடம் ஆழ்ந்த கிரயம், ABC முறைமை மற்றும் உடன் பெறுகை முறைமை போன்றவை பற்றிய தெளிவான அறிவு காணப்படவில்லை.

சில பரீட்சார்த்திகள் எவ்வாறு OTQ வகை வினாக்களுக்கு விடையளிப்பது என்பது பற்றிய விழிப்புணர்வு அற்றவர்களாக இருந்ததுடன் அவர்களில் சிலர் விடையுடன் முழுமையான வினாவையும் சேர்த்து எழுதியிருந்தனர். இதன் காரணமாக அவர்கள் தமது நேரத்தைத் தேவையற்ற விதத்தில் வீணடித்திருந்தனர். அவர்கள் இவ்வகையான வினாக்களை கையாள்வதன் பொருட்டு கிரயக் கணக்கீட்டின் அடிப்படையான எண்ணக்கருக்களில் போதுமான அறிவைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## பகுதி B

**வினா இல. 02** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா பிரதானமாக மிகை / குறை மேந்தலை உறிஞ்சல் மீது கவனஞ் செலுத்தியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவின் பகுதி (a) இற்கு விடையளித்திருந்தனர் ஆயினும் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவின் பகுதி (b) இற்கு விடையளிக்கத் தவறியிருந்தனர். அத்தகைய மாணவர்கள், எவ்வாறு மொத்த மேந்தலை உறிஞ்சலைக் கணிப்பது, அதனை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு குறை உறிஞ்சலைக் கணிப்பது என்பது பற்றித் தெரியாதிருந்தனர். சில பரீட்சார்த்திகள் கணிப்புகளின் அடிப்படையில் குறை மேந்தலை உறிஞ்சலை அடையாளங்காணத் தவறியிருந்தனர்.

பரீட்சார்த்திகள் இத்தகைய இலகுவான பகுதிகளில் தமது அறிவை விருத்தி செய்துகொள்வதற்காக கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் கற்றல் பொதி ஆகியவற்றைக் கற்று பயிற்சிபெறுதல் வேண்டும்.

**வினா இல. 03** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா பணிக்காக அறவிடப்படவேண்டிய விலையைக் கணிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கோரியிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள், இங்கு மிகவும் இலகுவான கணிப்பீடு கேட்கப்பட்டிருந்த போதிலும் விற்பனை விலை மீதான இலாப எல்லையைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் விற்பனை விலைக்குப் பதிலாக பணியின் மொத்தக் கிரயம் மீதான இலாப எல்லையை கணித்திருந்தனர்.

பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக வாசித்து இலாப எல்லையைக் கணிப்பதில் சரியான அடிப்படையைப் பிரயோகிக்க வேண்டும் என்பதுடன் இவ்வகையான இலகுரக வினாக்களுக்கான முழுப் புள்ளியையும் பெற்றுக் கொள்வதற்கு தமது எண்கணிதத் துல்லியத்தன்மையை மேம்படுத்திக் கொள்ளுதலும் வேண்டும்.

**வினா இல. 04** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா பாதீட்டின் மூன்று (03) முக்கிய நோக்கங்களை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கோரியிருந்தது. இது ஒரு கோட்பாட்டு ரீதியான வினாவாகும்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவில் கேட்கப்பட்டதைச் சரியாக வாசித்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் பாதீட்டின் முக்கிய நோக்கங்களை விபரிப்பதற்குப் பதிலாக அரசாங்கப் பாதீட்டின் பிரதான நோக்கங்கள், பாதிடலின் சிற்பம்சங்கள், பாதீட்டைக் கணிப்பிடும் முறை என்பவற்றை விபரித்திருந்ததன் மூலம் சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

பரீட்சார்த்திகள் விடையளிப்பதற்கு முன்னர் வினாவைச் சரியாக வாசித்து என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதைச் சரியாக விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். இவ்வகையான வினாக்களுக்கு வெற்றிகரமாக விடையளிப்பதற்காக பரீட்சார்த்திகள் கிரயக் கணக்கீட்டுடன் தொடர்புடைய கோட்பாட்டு ரீதியான அறிவை ஆழமாக விருத்தி செய்துகொள்ளுதல் வேண்டும்.

**வினா இல. 05** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா பிரதானமாக ஒருங்கிணைந்த கணக்கீட்டு முறைமை மீது கவனஞ் செலுத்தியிருந்ததுடன் மூலப்பொருள் தொக்குக் கட்டுப்பாட்டுக் கணக்கு, புத்துருவாகும் வேலைகள் கட்டுப்பாட்டுக் கணக்கு, முடிவடைந்த பொருட்கள் கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிக்குமாறு கோரியிருந்தது. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு திருப்திகரமாக விடையளித்திருந்தனர். ஆயினும் சில பரீட்சார்த்திகள் கணக்குகளில் வரவுப் பக்கத்தையும் செலவுப் பக்கத்தையும் இடமாற்றி குழப்பி எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வடிவில் கணக்குகளைத் தயாரிப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு கணக்குடனும் தொடர்புபட்ட பதிவுகளை விபரித்து ஒதுக்கப்பட்ட நேரத்தை வீணடித்திருந்தனர்.

விடையளிப்பதற்கு முன் வினாவைக் கவனமாக வாசிப்பது முக்கியமானதாகும். மேலும் பரீட்சார்த்திகள் கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் கற்றல் பொதி ஆகியவற்றைக் கற்று பயிற்சி பெறுதல் வேண்டும்.

**வினா இல. 06** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா உழைப்புக் கிரயத்தை அடிப்படையாகக் கொண்ட மிகவும் இலகுவான வினாவாக இருப்பதுடன் இங்கு தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி **பெரேரா** என்பவரது மொத்த உழைப்பினைக் கணிக்குமாறு கோரப்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தங்களுடைய கணிப்புகளில் வேலை செய்த சாதாரண மணித்தியாலங்களிலிருந்து சேமித்த மணித்தியாலங்களை பிழையாகக் கழித்திருந்தனர்.

பரீட்சார்த்திகள் இதுபோன்ற வினாக்களில் பயிற்சி எடுப்பதுடன் தங்களுடைய கணிப்புகளில் எளிய எண்கணித வழுக்களைத் தவிர்ப்பதற்கும் முயற்சித்தல் வேண்டும்.

## பகுதி C

**வினா இல. 07** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இவ்வினா உறிஞ்சற் கிரய முறையின் கீழ் வருமானக் கூற்றினைத் தயாரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கோரியிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவில் கேட்கப்பட்டதைச் சரியாக வாசித்திருக்கவில்லை. இதன் விளைவாக, பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குக் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிகூட செய்திருக்கவில்லை என்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பல பரீட்சார்த்திகள் இறுதித் தொக்கு, நிலையான மேந்தலை உறிஞ்சல் வீதம், நிலையான உற்பத்தி மேந்தலைகளின் குறை உறிஞ்சல் போன்றவற்றைத் துல்லியமாகக் கணிப்பதற்குத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகளால் மேந்தலைகளின் குறை உறிஞ்சலை அடையாளம்காண முடியாதிருந்ததுடன் சிலரால் இதனை வருமானக் கூற்றில் சரியானவாறு செம்மையாக்கம் செய்யக்கூட முடியவில்லை. இதன் விளைவாக பல பரீட்சார்த்திகளால் சரியான நிகர இலாபத்தினைக் கணிப்பிட முடியவில்லை.

பரீட்சார்த்திகள் உறிஞ்சல் கிரய முறை தொடர்பாக ஆழமான அறிவை விருத்தி செய்துகொள்ள வேண்டும் என்பதுடன் இவ்வாறான வினாக்களுக்கு விடையளிக்கின்ற ஆற்றலை வளர்த்துக்கொள்வதற்காக சுய கற்றல் புத்தகத்தில் உள்ள வினாக்களைப் பயிற்சி செய்து பார்த்தலும் வேண்டும். விடையளிக்கும்போது அதனுடன் தொடர்புடைய சகல வேலைகளையும் காட்டுவதுகூட முக்கியமானதாகும்.

**வினா இல. 08** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இவ்வினா மாதாந்த அடிப்படையில் காசுப் பாதீட்டைத் தயாரிப்பது பற்றிப் பிரதானமாகக் கவனஞ் செலுத்தியிருந்தது. பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் எதிர்வுகூறப்பட்ட வருமானத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருந்ததைப் போலவே எதிர்வுகூறப்பட்ட செலவையும் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

சிறு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாதாந்த அடிப்படையில் காசுப் பாதீட்டினைத் தயாரித்திருக்க வில்லை. அதற்குப் பதிலாக மொத்தத்தில் முழுக் காலாண்டிற்குமாகத் தயாரித்திருந்தனர். இதன் காரணமாக அவர்களால் குறைந்தளவு புள்ளிகளையே பெறக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் காசுப் பாதீட்டைத் தயாரிக்கையில், காசு வெளிப்பாய்வு ஒன்றாக தேய்மானத்தைத் தவறாகக் கருதியிருந்தனர். சிலர், கடன் விற்பனைகள் அடுத்துவரும் மாதத்தில் தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும் என்பதை கருத்திற்கொள்ளவில்லை. அவர்கள் தவறாக அதனை அதே மாதத்தில் தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும் எனக் கருதியிருந்தனர்.

பரீட்சார்த்திகள், பாதீடு தயாரிப்பது தொடர்பான வினாக்களில் பயிற்சி எடுத்தல் வேண்டும் என்பதுடன் பாதீட்டுடன் தொடர்புடைய கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருக்கள் தொடர்பில் கற்றுக்கொள்வது முக்கியமானதாகும்.

**வினா இல. 09** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இவ்வினா பிரதானமாக, வெவ்வேறு உற்பத்திப் பிரிவுகளுக்கிடையே மேந்தலைகளை ஒதுக்கீடு செய்வதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றல் மீதும் அவ்வொவ்வொரு உற்பத்திப் பிரிவுகளுக்கும் சேவைப் பிரிவுகளின் கிரயத்தை பங்கீடு செய்வதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றல் மீதும் கவனத்தைச் செலுத்தியிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்து, உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். உற்பத்தி மற்றும் சேவைப் பிரிவுகளுக்கிடையில் மேந்தலைக் கிரயத்தை ஒதுக்கீடு செய்யும் அடிப்படையைப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாகப் பிரயோகித்திருந்தனர் என்பதை அவர்களது விடைகளில் இருந்து அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அத்துடன் இரு உற்பத்திப் பிரிவுகளுக்கிடையிலும் சேவைப் பிரிவுகளின் மேந்தலைக் கிரயத்தைப் பகிர்வதற்கு சரியான வீதத்தைப் பிரயோகித்திருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் பொறித்தொகுதி மற்றும் உபகரணக் கிரயத்தின் அடிப்படையிலான தேய்மானத்திற்குப் பதிலாக பொறித்தொகுதி மற்றும் அலுவலக உபகரணத்தின் கிரயத்தைத் தவறாக ஒதுக்கீடு செய்திருந்தனர்.

## <u>பகுதி D</u>

**வினா இல. 10** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

**பகுதி (A)** {ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 15} இங்கு பிரதானமாக செயன்முறைக் கிரயமிடல் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு பற்றிக் கவனஞ்செலுத்தப்பட்டது.

இவ்வினா இரசாயனப்பொருள் **A** தொடர்பான செயன்முறை 01 கணக்கு, செயன்முறை 02 கணக்கு ஆகிய வற்றைத் தயாரிப்பதற்கு பரீட்சார்த்திகளைக் கோரியிருந்தது.

செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருக்கவில்லை. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் அசாதாரண இலாபம், அசாதாரண நட்டம் ஆகியவற்றின் பெறுமதிகளையும் வெளியீட்டின் பெறுமதியையும் எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றிய அறிவைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் நேரடியாகத் தரப்பட்ட பெறுமானங்களை மாத்திரம் இட்டிருந்தனர். விசேடமாக, செயன்முறைக் கணக்கிற்கான நேர் பொருள், நேர் கூலி, உற்பத்தி மேந்தலைகள் போன்றவற்றைச் சரியாக இட்டிருந்தனர். பெரும்பாலானவர்கள் இப்பகுதிக்கு மாத்திரமே புள்ளிகளைப் பெற்றிருந்தனர். வெளியீட்டுப் பெறுமதி மற்றும் ஓடிவுப் பெறுமதி என்பன பெரும்பாலானவர்களால் சரியாகக் கணிப்பிடப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் அலகொன்றிற்கான கிரயத்தைக் கணிப்பிடும்போது சாதாரண நட்டத்தை கருத்திற்கொண்டிருக்கவில்லை அல்லது சாதாரண நட்டத்திற்காக பிழையான பெறுமானத்தைக் கருதியிருந்தனர். பரீட்சார்த்திகள் செயன்முறைக் கணக்குகளுடன் நெருங்கியிருக்க வேண்டும் என்பதுடன் இதுபோன்ற கணக்குகளில் பயிற்சி பெறுதலும் வேண்டும்.

**பகுதி (B)** { ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10}

இவ்வினா மிகவும் இலகுவான வினாவாக இருந்ததுடன் இது பிரதானமாக முரண்களின் கணிப்பீடு மீது கவனத்தைச் செலுத்தியிருந்தது. ஆயினும் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருக்கவில்லை. பரீட்சார்த்திகள் இப்பாடப்பரப்பு தொடர்பில் தெளிவானதும் அறுதியானதுமான அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் நேர் பொருள் விலை முரண் மற்றும் நேர் பொருள் பாவனை முரண் ஆகியவற்றைத் துல்லியமாகக் கணித்திருந்த போதிலும் நேர் பொருள் கிரய முரணைக் கணித்திருக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் பிழையான சூத்திரத்தை எழுதியிருந்ததுடன் சூத்திரத்தில் பெறுமானத்தைப் பிரதியீடு செய்வதிலும் பிழை விட்டிருந்தனர். அவர்களில் சிலர் முரண் ஆனது சாதகமானதா அல்லது பாதகமானதா என்பது பற்றி குறிப்பிட்டிருக்கவில்லை. எனவே, பரீட்சார்த்திகளால் ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற முடியவில்லை.

பரீட்சார்த்திகள் தங்களுடைய அறிவை மேம்படுத்திக்கொள்வதற்காக கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் அதேபோன்ற பரீட்சை வினாப்பத்திரங்கள் போன்றவற்றில் பயிற்சி எடுத்தல் வேண்டும்.

- - -

## பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்தி செய்வதற்கு கவனத்திற்கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்

**1.** வினாப்பத்திரத்தைக் கையிலெடுத்ததும் அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.

**2.** வினாவைப் பல தடவைகள் வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

**3.** சுய கற்றல் பாடப் புத்தகத்தை படிப்பது அவசியமானது என்பதுடன் அதிலுள்ள உதாரணங்களைச் செய்துபார்த்து பயிற்சியெடுப்பதும் முக்கியமானதாகும்.

**4.** எண்கணித வழுவைத் தவிர்ப்பதற்காக கணிப்பீடுகளை மீளவும் பரிசீலிப்பதுடன் சகல தொடர்புபட்ட கணிப்பீட்டு வேலைகளையும் தெளிவாகக் காட்டவும். நீங்கள் கணிப்பீட்டைச் செய்யும்போது ஏதாவது எடுகோள்களை எடுப்பீர்களாயின் அவற்றையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

**5.** பரீட்சையின்போது உங்களுடைய நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

**6.** விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், உங்களுடைய வினா இலக்கங்களும் சுட்டெண்ணும் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

**7.** கடந்தகால வினாக்களுக்கு விடையளித்துப் பார்ப்பதன் மூலம், பாடம் தொடர்பான அறிவையும் நீங்கள் விடை எழுதும் ஆற்றலையும் மேம்படுத்திக்கொள்ள முடியும்.

**8.** வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் பட்டியல் வினாப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு விடையளித்தல் வேண்டும்.

**9.** சித்தியடைதல் என்ற பிரதான எண்ணத்துடன் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -